மயிலாடுதுறை மாவட்டம் - குத்தாலம், திருவாலங்காடு கிராமத்தில்

# வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக.25-

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம், திருவாலங்காடு கிராமத்திலுள்ள தனியார் வெடி உற்பத்தி மையத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ளதுடன் நிதியுதவி வழங்கிடவும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு :

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் வட்டம், திருவாலங்காடு கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான வெடி உற்பத்தி மையத்தில் நேற்று (24.08.2024) பிற்பகல் சுமார் 01.00 மணியளவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் திருவாவடுதுறை கிராமம், மேலப் புதுத்தெருவைச் சேர்ந்த திரு.கர்ணன் (வயது 45) த/பெ. உத்திரம் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார், மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த திரு.லட்சுமணன் (வயது 45) த/பெ.சுப்பிரமணியன் என்பவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இவ்விபத்தில் காயமடைந்து திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் திரு. கலியபெருமாள் மற்றும் குமார் ஆகிய இருவருக்கும் சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

செ.தமிழ்வேந்தன் தலைமை! திரு.வி.க. நகர் வடக்கு பகுதியில்- இன்று

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி மாபெரும் கபடி போட்டி!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு துவக்கி வைத்து பரிசு வழங்குகிறார்!

சென்னை, ஆக. 25-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு, சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க. நகர் வடக்குப் பகுதி 74வது வட்ட தி.மு.க. அந்தோணியம்மாள் கபடி குழு நடத்தும் மாபெரும் கபடி போட்டி (பகல் இரவு ஆட்டம்) இன்று (25.8.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணி வரை பெரம்பூர், ஜமாலியா பள்ளி மைதானத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு பகுதிச் செயலாளர் செ. தமிழ் வேந்தன் தலைமை வகிக்கிறார்.

எஸ்.புஷ்பராஜ், க. ஞானசேகர் ஆகியோர் வரவேற்கின்றனர்.

டி.லோகேஷ், லயன் பி.உதயசங்கர், பெரம்பூர் ஆர்.ராஜன், பெரம்பூர் ஆர்.மகேஷ், பெரம்பூர் இளவரசன், கினார் ஆறுமுகம், மா.ருத்ரமூர்த்தி, ஜி.கிருஷ்ணகுமார், எம்.எஸ்.ஜெ.சாகுல், ஜமாலியா ஜமால், எஸ்.பிரபுதாஸ், எம்.மிருதன், சே. மணிமாறன், சுவிட் பாபு, எப். செபஸ்டின் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்துகொண்டு போட்டியை துவக்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், கலாநிதி வீராசாமி எம்.பி., ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., திருவொற்றியூர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., சரிதா மகேஷ்குமார், லயன் பி.தினகரன், மு.வேல்முருகன், எம்.எம்.மாறன், என். வினாயமூர்த்தி,

எம்.சாமிகண்ணு, புனிதவதி எத்திராசன், இசட். ஆசாத், பி.ஜெ. துளசிங்கம், நா.துலுக்கானம், பெரோஸ்கான், ஆர்.நிலவழகன், மு.சரவணன், ரமணி லோகேஷ், எஸ். தமிழ்ச்செல்வி, ச.அம்பேத் வளவன்,

தில்லை கதிரவன், அ. கோவிந்தன், எஸ்.பாண்டுரங்கன், புல்லட் கி. ரமேஷ், த.கருணாநிதி, பி.சுகுமார், புவனவதி, வனஜா சண்முகம், அ.கருணாநிதி, ஜி.கிருஷ்ணகுமார், மா.ருத்ரமூர்த்தி, எம். இசட்.அபோய், பரிமளா சுரேஷ்பாபு, எம்.ஏ.டீக்கா, பொல்லு டி.சுரேஷ், எம்.தமீம், வி.கா.வெங்கடேசன், எஸ். சசிகுமார், எஸ்.வெங்கடேசன், டி.சந்திர சேகர் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

அந்தோணியம்மாள் கபடி குழு போட்டி ஒருங்கிணைப்பாளர்கள், சி.ஆர்.தோணி, டி.சந்திரகாந்தன், என்.கிருஷ்ணன், கே.பாலா, ஜோதிநகர், பி.ராமு, என். பிரகாஷ், எம். விஜயகுமார் (எ) குட்டி, ஏ.ஆனந்த், ஜெ. ஜான் பால், விக்னேஷ்வரன், கே.அசோக் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. - சாய் ஜெய்காந்த் பாரதி பங்கேற்பு!

# பெருங்களத்தூர் வடக்குப்பகுதியில் இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்த்தல்!

## பகுதிச் செயலாளர் டி.காமராஜ் வேண்டுகோள்!

*சென்னை, ஆக.25-*

*பெருங்களத்தூர் வடக்குப் பகுதி செயலாளர் டி. காமராஜ் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-*

*தம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் இன்று (25.8.24 - ஞாயிற்றுக் கிழமை) காலை 9.30 மணியாளவில் 49 வது வட்டத்தில் உள்ள ஜாகீர் உசேன் தெரு காட்டு கருமாரி அம்மன் கோயில் அருகில் இல்லம் தோறும் இளைஞரணி உறுப்பினர்கள் சேர்க்கும் முகாம் நடைபெற்றிட உள்ளது.*

*இதில் பகுதி கழக செயலாளர் மண்டலத் தலைவர் டி.காமராஜ் ஆகிய என்னுடை தலைமையிலும், தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர் மண்டலத்தலைவர் எஸ். இந்திரன் வரவேற்பிலும் நடைபெறும் இந்நிகழ்ச்சியை தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. நிகழ்ச்சி பார்வையாளர் சுற்று சுழல் அணியின் துணை செயலாளர் சாய் ஜெய்காந்த் பாரதி ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.*

*ஆகையால் பகுதி கழக நிர்வாகிகளும், இந்நாள், முந்நாள் உள்ளாட்சி பிரிதிநிகளும், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களும், கழகத்தின் முத்த முன்னோடிகளும் தவறாமல் வருகை தந்து நிகழ்ச்சியை சிறப்பிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் சைதை கிழக்குப் பகுதி

# 169 அ வட்ட துணைச் செயலாளர் சொ.முருகையன் இல்ல நிகழ்ச்சி!

## மு.மகேஷ்குமார் - இரா.துரைராஜ் - எம்.கிருஷ்ணமூர்த்தி பங்கேற்பு

*சென்னை, ஆக. 25 -*

*சைதை கிழக்குப் பகுதி 169 அ வட்டக் கழக துணைச் செயலாளர் சொ.முருகையனின் புதல்வி பாரதி முருகையனுக்கு சொந்தமான ‘ஆர்.பி. மேக் ஓவர் ஸ்டுடியோ” எனும் அழகு நிலையத்தை இன்று (25.8.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு எண்.31/9, அசோக்நகர் 7-வது நிழற்சாலையில் நடைபெறும் நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாரும் - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் திறந்து வைக்கிறார்.*

*இந்நிகழ்ச்சியில் துணை மேயர் மு.மகேஷ்குமார், சைதை கிழக்குப் பகுதிச் செயலாளர் - மண்டலக் குழுத் தலைவர் இரா. துரைராஜ், மேற்குப் பகுதிச் செயலாளர் மண்டலக் குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாவட்டக் கழக அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், மாவட்டப் பிரதிநிதி சைதை எஸ். ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், முன்னணியினர், அனைத்து அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகளும் குத்துவிளக்கேற்றி சிறப்பிக்கின்றனர்.*

*ராஜேஷ் பச்சையப்பன், பாரதி முருகையன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.*



பல்லாவரம் சட்டமன்ற தொகுதி, திருமலை நகர் பகுதியில் அஸ்தினாபுரம் ஏரியிலிருந்து வெளியேறும் உபரி நீரை நன்மங்கலம் ஏரிக்கு கொண்டு சேர்க்க ரூபாய் 26 கோடி மதிப்பீட்டில் 900 மீட்டர் நீளத்திற்கு கட் அண்ட் கவர் மழை நீர் கால்வாய் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த பணிகளை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார். அப்போது இந்த பணிகளால் பாதாள சாக்கடை மற்றும் மெட்ரோ வாட்டர் பைப்புகள் சேதம் அடையும் என பொதுமக்கள் சட்டமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுத்தனர். இந்த கோரிக்கையை உடனடியாக கட் அண்ட் கவர் கால்வாய் பணிகளை மாற்றுப்பாதையில் மேற்கொள்ள பொதுப்பணித்துறை மற்றும் தாம்பரம் மாநகராட்சி பொறியாளர்களிடம் கேட்டுக்கொண்டார். ஆய்வின்போது பொதுப்பணித்துறை, தாம்பரம் மாநகராட்சி, செம்பாக்கம் வடக்கு பகுதி செயலாளர் ஏ.கே.கருணாகரன், க.ரமேஷ், எம்.நாகராஜ், டி.கார்த்திக், எம்.இளவரசன், எல்.டில்லிபாபு மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

## தி.மு.க. மாணவர் அணி

# மாநகர அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் நியமனம் (ஆறாவது பட்டியல்)

### தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ., அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணியின் சேலம், ஈரோடு, திருச்சி கிழக்கு, தூத்துக்குடி ஆகிய மாநகரங்களின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சேலம் மத்திய மாவட்டம்**
**சேலம் மாநகரம்**

**அமைப்பாளர் :** எம். மணிகண்டன், எம்.பி.ஏ., நெ.15, டி29, கண்ணன் தெரு, சேலம் – 1.

**துணை அமைப்பாளர்கள் :** ப. இளஞ்செழியன், எம்.காம்., சி.ஏ., நெ.318, கோமுட்டிக்காடு, நரசோதிப்பட்டி, சேலம். எஸ். சுந்தர், டி.எம்.இ., நெ.37, புது தெரு - 2, பொன்னம்மாபேட்டை, சேலம். அழகாபுரம் ஜெ. மோகன், பி.காம்., நெ.2/91பி, பாவை வட்டம், சேலத்தாம்பட்டி, சூரமங்கலம், சேலம். டி. இந்துஜா, பி.டெக்., நெ.133/134, வாசக சாலை தெரு, பொன்னம்மாபேட்டை, சேலம். ஏ.சீனிவாசன், பி.ஏ., நெ.91/ஏ, கிழக்கு இரயில்வே காலனி, ஜங்சன், சேலம்.

**ஈரோடு தெற்கு மாவட்டம்**
**ஈரோடு மாநகரம்**

**அமைப்பாளர் :** என். ஸ்ரீதர், டி.ஐ.டி., ஏ.பி.என். கார்டன், பெரிய செட்டிபாளையம், புதூர், ஈரோடு – 2.

**துணை அமைப்பாளர்கள் :** ஆர். நல்லசிவம் (எ) சிவா, பி.காம்., சி.ஏ., பொய்யரிக்கரை வீதி, பயர் சர்வீஸ் பின்புறம், ஈரோடு 1. எம். மணிகண்டன் (எ) சிவா, டி.எம்.இ., நெ.36/1, சின்னமுத்து மெயின் வீதி, இடையன்காட்டு வலசு, ஈரோடு 638 011. கு. தனராஜா, பி.இ., நெ.13, வேலப்பக்கவுண்டன் வலசு, வில்லரசம் பட்டி, ஈரோடு - 7. பா. சத்தியவதி, எம்.எஸ்.சி. பி.எட்., கொல்லம்பாளையம், ஈரோடு. பி. விஜயகுமார், எம்.ஏ., பி.எல்., நெ.70/10பி, டவர்லைன் காலனி, சரோஜினி நகர், ஈரோடு 11.

**திருச்சி தெற்கு மாவட்டம்**
**திருச்சி கிழக்கு மாநகரம்**

**அமைப்பாளர் :** ஏ. முகமது அசாருதீன், டி.சி.இ., நெ.33/ஏ, ஏ.எம்.ஏ இல்லம், வ.உ.சி. நகர்,3வது நகர், திருவெறும்பூர், திருச்சி – 13.

**துணை அமைப்பாளர்கள் :** பி. செந்தாமரை கண்ணன், டி.சி.இ., நெ.168எச்/1, கீழ படையாச்சி தெரு, பாலக்கரை, திருச்சி01. பி. கீதா, எம்.சி.ஏ., நெ.62ஏ/2, இலுப்பூர் ரோடு, கல்லுக்குழி, திருச்சி - 20. பி. மணிகண்டன், எம்.பி.ஏ., நெ.6/27, சங்கர் நாயக்கர் தெரு, கல்யாணசுந்தரபுரம், மதுரை ரோடு, திருச்சி – 08. எம். சிபிராஜ், எம்.ஏ., நெ.3/284, வடக்கு பிள்ளையார் கோவில் தெரு, வடக்கு காட்டூர், திருச்சி - 19. க. சந்திரசேகர், எம்.பி.ஏ., நெ.23, நரசிம்ம நாயுடு தெரு, மரக்கடை, திருச்சி – 08.

**தூத்துக்குடி வடக்கு மாவட்டம்**
**தூத்துக்குடி மாநகரம்**

**அமைப்பாளர் :** பொ. வினோத் கண்ணன், டி.எச்.எம்., நெ.15, நாடார் தெரு, தூத்துக்குடி – 1.

**துணை அமைப்பாளர்கள் :** எஸ். கந்தசாமி, பி.இ., 6.107ஜெ/1ஜி/18, டி.எம்.பி. காலனி, 5வது தெரு, தூத்துக்குடி - 8. செ. கார்த்திகேயன், டி.சி.இ., நெ.3பி/63, பிரையண்ட் நகர் 13வது தெரு, பாரதி நகர், தூத்துக்குடி - 8. ஏ. அர்ஜீன், பி.இ., நெ.1இ/1, சுந்தரவேல்புரம் 2ம் தெரு, தூத்துக்குடி - 2. சத்யா ஈஸ்வரி, பி.எஸ்.சி., நெ.3ஏ/363, இந்திரா நகர், எப்.சி.ஐ. குடோன் எதிரில், தூத்துக்குடி - 8. வே. பாலமுருகன், பி.ஏ., நெ.66/ஏ, போல்டன்புரம் 2ம் தெரு, தூத்துக்குடி - 3.

**"அண்ணா அறிவாலயம்"** சென்னை – 18 நாள்- 24.08.2024

**சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ.,** செயலாளர் தி.மு.க. மாணவர் அணி



இல்லம் தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கும் நிகழ்வு நேற்று (24.08.2024) குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்தில் பெரிய பாண்டிச்சேரி ஊராட்சியில் வீடு வீடாக சென்று உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது. இதில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், ஒன்றிய செயலாளர் வந்தே மாதரம், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஜனார்த்தனன், பாபு குமார், சஞ்சீவி, பூங்கொடி அரசு, சத்தியமூர்த்தி மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துரை. கலியமூர்த்தி
### ஆகஸ்ட் 25 (1989)



பள்ளிப்பருவத்திலிருந்தே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, பரங்கிப்பேட்டை, சிதம்பரம் பகுதிகளில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

பரங்கிப்பேட்டை ஒன்றியச் செயலாளராக மூன்று முறையும், சிதம்பரம் நகரச் செயலாளராக இரண்டு முறையும் மாவட்டப் பொருளாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு, மொழிப் போராட்டம், இலங்கைத் தமிழர் பிரச்சினை மறியல் போன்ற போராட்டங்கள் மற்றும் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

1977ல் சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகவும் – 1986ல் சிதம்பரம் நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பபகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.சி.இளங்கோவன் (எ) ஏழுமலை
### ஆகஸ்ட் 25 (2016)



ஒருங்கிணைந்த செங்கை–அண்ணா மாவட்டத்தில் உள்ள வில்லிவாக்கம் ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறையும் – பொதுக்குழு உறுப்பினராக இரண்டு முறையும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

இவர், அரசுப் பள்ளியில் தலைமையாசிரியராக பணியாற்றிக் கொண்டிருந்தபோது, துறையின் பல்வேறு நடவடிக்கைகளையும் மீறி கழகம் அறிவித்த ஆர்ப்பாட்டம், போராட்டங்களில் பங்கு கொண்டார்.

இவர் ஒன்றியச் செயலாளராக இருந்தபோது, சைக்கிளிலேயே பயணம் செய்து கழகத்தை வளர்த்ததுடன், இந்தித் திணிப்பு, சட்டநகல் எரிப்பு போன்ற கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**